ARYA DHARMAM
TAMIL WEEKLY.
REGD. No. M. 2913

# ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

| | | |
|---|---|---|
| ஜீவிய சந்தா | ... | ரூ 50 |
| ஒரு வருஷ சந்தா | ... | ரூ. 3 |
| ஆறுமாத சந்தா | ... | ரூ. 1½ |

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்கு
தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-௵ சித்திரை-மீ 6௳ 1940௵ ஏப்ரல்மீ 18௳ | ஸ-16

## வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. சர்மா

**தார்மிகரை மறப்பதற்கில்லை!!** கொல்லங்கோட் வாஸுதேவ ராஜா, கொச்சி ராஜாங்கம் சண்டாளரை ஆலயத்திலிடாததற்கோர் காரணமாவர். அந்த ஸமஸ்தானாதிபதிகளுடன் எல்லா வகையிலும் நெருங்கிய ஸம்மந்தமுள்ளவர். தர்மத்திற்கோர் ஆணிவேர். பேச்சைவிட செயலால் பற்றுள்ளவர். நமது கக்ஷி அவர் பிரிவால் பெரும் நஷ்டமடைந்தது.

**அநுதாபக் கூட்டம்!!** முத்யால் பேட் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம் அமர கலா விலாஸினி இவைகளின் ஆதரவில் சென்ற ஞாயறன்று அவர் குடும்பத்திற்கு அநுதாபங்காட்ட ஓர் கூட்டம் கூடிற்று. அவருடன் பழகிய ஸ்ரீமான் ஸோமதேவ சர்மா தலைமை வஹித்து அவரது குணகணங்களை ஸபைக்கு உரைத்தார். ஸ்ரீ வி. எஸ். ஜயராமய்யர் பிரேரணை செய்ய. ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகள் ஆமோதித்து தீர்மாநம் அவர் குடும்பத்திற்கு அனுப்பப்பட்டது,

**10 வருஷ திட்டம்!!** ஹிட்லர் பத்தாண்டில் ப்ரஞ்ச் பிரிட்டிஷ் உள்பட ஸகல தேசங்களையும் கைப்பற்ற உரிய ஓர் திட்டம் போட்டிருப்பதாக ஓர் செய்தி கூறுகிறது. பேராசை பிடித்த கலியில் இது ஓர் ஆச்சர்யகரமானதல்ல. பலர் இத்தகைய எண்ணத்தை வெளியிடாதிருப்பர்.

**பேச்சு வேறு செய்கை வேறு!!** உத்தமருக்கு முக்காரணங்களும் ஒன்றாயிருக்கும் தேசிய வாரத்தில் தலை முதல் கால் வரை ஒவ்வோர் பேசத் தெரிந்த காங்கிரஸ்காரனும் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென வாய் நோகும் வரை பேசித் தள்ளினர். ஆனால் செயலோ. சொல்ல வேண்டுமா.

**ஆரம்பித்தால் தவறே!!** பல மாகாண காங்கிரஸ் கமிட்டிகள் ஸத்யாக்ரஹ கமிட்டிகளாக மாறுகின்றன. இதைக்கண்டு ஸந்தோஷமடைந்து காந்திஜீ ஸத்யாக்ரஹம் ஆரம்பிக்க மாட்டாரென்றே நம்புகிறோம்.

**எதிர்பார்த்த படியில்லை!!** நாகபுரி சென்ற நம் தலைவர்கள் ஸ்ரீபுரி ஸ்வாமிகள் போன்றவர்களுடன் வந்து உத்ஸாகமூட்டி தக்க வேலை ஆரம்பிப்பரென எண்ணினோம். யார் மீது குற்றம் கூறுவது.

**நடந்ததையேனுமறிவிக்க!!** ஆங்கு என்ன நடந்ததென்பதையேனும் சுருக்கமாகவேனும் நமது பத்திரிகையிலேனும் பிரசுரித்தல் நலம்.

**நூதன பஞ்சாங்க ச்ரவணம்!!** சென்னை ஸ்ரீமடத்தில் சென்ற சனியன்று மாலை ஸ்ரீவத்ஸ. ஸோமதேவ சர்மா அவர்கள் அதைப் படித்து பஞ்சாங்கங்கள் ஒன்றுபட வேண்டிய அவச்யத்தை வற்புறுத்தி தர்மானுஷ்டானத்தை ஒழுங்காக நடத்தினால் மழை க்ஷேமம் உண்டாகுமென்றார்.

## மதுரை கள்ளழகர் கோவில் உத்ஸவம் பஹிஷ்கரிக்கும்படி வேண்டுகோள்

மதுரைக்கு ஸமீபத்திலுள்ள திருமாலிருஞ்சோலை மலையிலுள்ள கள்ளழகர் ஸ்வாமி கோவிலில் தீண்டாதார் பிரவேசம் காரணமாக வைதிக ஹிந்துக்கள் அதை பஹிஷ்கரித்து இருப்பது யாவரும் அறிந்த விஷயம்.

சித்ரா பௌர்ணமி உத்ஸவ ஸமயத்தில் மண்டகப் படிக்காரர்கள் அதை நிறுத்திவிட வேண்டுமென்றும், பொதுஜனங்களும் மதுரைக்கு ஸ்வாமி வரும் போது உத்ஸவத்தில் கலந்து கொள்ள வேண்டாமென்றும் மதுரை மீனாக்ஷி தர்மஸேவா ஸங்கத்தார் ஸ்ரீ ஆர். கணபதி அய்யர் தலைமையில் நடந்த கூட்டத்தில் தீர்மானித்தனர். துண்டு பிரசுரம் வெளியிட்டும், வீடுவீடாகப் போயும் பிரசாரம் செய்யவும் முடிவு செய்யப்பட்டது.

## மது விலக்கு உத்திரவு சட்ட விரோதமானது பம்பாய் ஹைகோர்ட் தீர்ப்பு கவர்னர் அவஸரச் சட்டம் செய்கிறார்

பம்பாயில் காங்கிரஸ் கவர்ண்டார் மது விலக்கு விஷயமாகச் செய்துள்ள உத்திரவுகள் சட்டத்திற்கு விரோதமானவைகளென்று பம்பாய் ஹைகோர்ட் தீர்ப்பு கூறியது. மதுவிலக்குச் சட்டபடி சிலரிடம் லாகிரிவஸ்துக்கள் இருந்ததாக கேஸ்நடந்து, அபராதம் விதிக்கப்பட்டதின் பேரில் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செயது கொள்ளப்பட்டது. அந்த கேஸில்தான் மேற்கண்ட தீர்ப்பு ஏற்பட்டது. இதன்மேல் கவர்னர் ஒரு அவஸரச்சட்டத்தைச் செய்து மதுவிலக்கு உத்திரவுகள் செல்லும்படியாகக் கூடியவைகளென்று ஸ்தாபிக்க வேண்டியதாயிற்று

## கும்பகோணம் ஓர் பிரிவுபசாரம்

நமது நகர் டவுன் ஹைஸ்கூலில் சுமார் 12-வருஷகாலமாகத் தலைமை யாசிரியராயிருந்து வரும் ஸ்ரீமான் என். ரங்கஸ்வாமி ஐயர் எம். எ. எல். டி. அவர்களும் சுமார் 25-வருஷகாலமாய் உதவி ஆசிரியராயிருந்து வரும் ஸ்ரீமான் எஸ். கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களும், தத்தம் உத்யோகப் பதவியிலிருந்து விலகிக் கொள்வதை முன்னிட்டு ஷை இருவர்களுக்கும் ஷை ஸ்கூல் உபாத்தியாயர் சங்கத்தின் ஆதரவில் ஓர் இனிய பிரிவுபசாரம் 12-4-40 மாலை 4-மணிக்கு நடத்தப்பட்டது. சிற்றுண்டிகள் வழங்கப்பட்ட பின்னர் தெய்வ வணக்கத்துடன் விருந்தினர்களுக்குச் சங்கக் கார்யதரிசியால் மாலைகள் சூட்டப்பட்டு ஆங்கிலத்தில் இரு உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. வழக்கமாக அளிக்கப்படும் வெள்ளிக்கிண்ணங்களும் பரிசளிக்கப்பட்டன. ஸ்ரீமான்கள் ஆர். சடகோபாசாரியார், கே. எஸ். ராமச்சந்திர ஐயர், எஸ். சாரங்கபாணி ஐயங்கார், ஸ்ரீ. ரங்கா சாரியார், ஊ. சா. வேங்கட்டராம ஐயர், எம். எஸ். கிருஷ்ணமா சாரியார், ஆர். நடேச ஐயர், டி. ஸ்ரீனிவாஸ ராகவ ஐயங்கார், எம். ராமராவ், கே. விசுவநாதய்யர், எஸ். ஸ்ரீனிவாஸய்யர் முதலியோர் அவ்விருவர்களின் குணாதிசயங்களைப் பற்றி நீண்ட நேரம் புகழ்ந்து பேசினார்கள். விருந்தினர்களும் அவைகளுக்குத் தகுந்தவாறு பதிலளித்தனர். ஓர் புகைப்படமும் பிடிக்கப்பட்டது. சங்கக் காரியதரிசி ஸ்ரீமான எம், ராமராவ் அவர்களால் உபாத்தியாயர்களின் சார்பாகவும், சிப்பந்திகளின் சார்பாகவும் விருந்தினர்களுக்கும் ஏனையோர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது (க. நி.)

# நமது நிலைமை.

(தி. ப. ஜெகதீசய்யர்)

மானிட வர்க்கம் நற்கதி அடைய வேதம் பரம்பொருளால் அருளப்பெற்றது. வேதத்தின் நுண்பொருளை சாஸ்திரங்கள் விவரிக்கின்றன. நமது ரிஷிகள், சைவ வைஷ்ணவ ஆச்சாரியார்கள் வேதநெறியைக் கடைப்பிடித்து மேன்மையுற்ற விவரங்களை புராணங்கள் உணர்த்துகின்றன. அப்பெரியார்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய நமது மூதாதையோர்கள் சீரும் சிறப்பும் பெற்றிருந்ததை சரித்திரங்கள் தெரிவிக்கின்றன. இன்னும் பல பெரியோர்கள் நம்மூல் இருந்துவருவது கண்கூடு. உலகிற்கே ஆத்ம ஞானத்தை அளித்துவரும் தனிப்பெருமை நமது பரதகண்டத்திற்கே உரியது. பாரமார்த்திக தன்மைக்கும் ஆசார அனுஷ்டானங்களுக்கும் ஹானி ஏற்படத்தக்க நிலையில் பல வழிகளிலும் செயல் புரியப்பட்டுவருகிறது. கிருஸ்துவ மகம்மதிய மதப்பிரசாரம், அரசாங்கத்தின் பிரித்தாளும் சூழ்ச்சி, பல ஸ்தாபனங்கள் மூலம் நம்மவர்களின் விஷமப்பிரசாரம் எல்லாவற்றிற்கும்மேலதாக ஸநாதனிகளின் செயலற்ற தன்மை எல்லாம் ஒருங்கே சேர்ந்து நம்மை ஹீனஸ்திதிக்குக்கொணர்ந்துவிட்டது. இந்நிலையிலிருந்து நாம் மீளவேண்டும். பாரததேச முழுவதும் கட்டுப்பாடான தீவிர பிரசாரம் செய்தேயாகவேண்டும். வேறுவழியில்லை.

காங்கிரஸ் அரசியல் ஸ்தாபனமாக இருந்து, அரும்பெரும் தியாகங்கள் புரிந்து நமது ஆதரவைப் பெற்ற காங்கிரஸ் ஸபை [illegible] பெற்றபின் பரதகண்டத்தின் பெருமைக்குரியதான வைதிக மதத்தை உருக்குலைக்கும் தன்மையில் தீண்டாதார் ஆலயப்பிரவேசச் சட்டம் செய்த அநீதியை என்னென்றுரைப்பது? காங்கிரஸில் இன்று ஆதிக்கம் பெற்றுள்ள, காந்திஜீ, ராஜன், ராஜாஜி போன்றவர்களின் ஹடபுத்தி இன்னம் தீண்டாதார் ஆலயப்பிரவேச விஷயத்தில் தணியவில்லையே! காங்கிரஸ் மத விஷயங்களில் தலையிடாதிருந்தால் ஸநாதனிகள் காங்கிரஸை ஆதரிக்கலாம் என்று நம்மவரில் பிரமுகர்கள் சிலர் எண்ணும்படி ருஜு என்ன இருக்கிறது?

ஹிந்து மஹாசபையின் போக்கை கவனிப்போம். தேச நாசகரமான வகுப்புத் தீர்ப்பில் தேசீய முஸ்லீம்களை திருப்திபடுத்த காந்திஜியின் தூண்டுதலில் காங்கிரஸை நடுநிலைமைக்குள்ளாக்கிய துரோகத்தையும், சமீபகாலத்தில் முஸ்லீம் லீக் தலைவர் ஜின்னா சாகேப் இந்தியாவை முஸ்லீம் இந்தியா, ஹிந்து இந்தியா என்று பிரிக்க முற்பட்ட புன்மையையும் பலமாக எதிர்த்து, ஹிந்துக்களின் பலத்தை அதிகரிக்கச் செய்ய ஹிந்துமஹாசபை மேற்கொண்டுள்ள வேலையும், அதன் தலைவராகத் தற்காலமிருந்துவரும் ஸ்ரீஜத் ஸவர்க்காரின் வீர மொழிகளையும் ஒருவாறு நாம் போற்றக்கூடுமானாலும், நாம் பூர்ணமாக இந்துமஹாசபையிடம் நம்பிக்கை வைப்பதற்கில்லை. ஏனெனில் தீண்டாதார் ஆலயப்பிரவேசம், மத சமூக விஷயங்களில் சட்டசபைகள் தலையிடுதல் இவைகளில் ஹிந்துமஹாஸபை உடன்பாடுள்ளதாக இருப்பது சமீபத்தில் சேலத்தில் ஸ்ரீ ஜத்சவர்க்காரை ஸநாதனிகள் கண்டு பேசியதிலிருந்து தெரிகிறது. ஹிந்துமதத்தின் அடிப்படையான வேத மதம், ஆசார அனுஷ்டானங்களில் ஹிந்து மஹாசபையின் போக்கு ஸநாதனிகள் ஏற்கக்கூடியதாக இல்லை.

## அகில இந்தியவர்ணாச்ரம சுயராஜ்யசங்கம்

இந்த நிலையில் ஸநாதனிகள் தயக்கத்தை விடுத்து தன்கையே தனக்குதவி,, என்றபடி தனித்து நின்று செயல்புரியவேண்டும். வேலைகடினம்தான், என்செய்வது? வேண்டுவது திடச்சித்தம். கட்டுப்பாடான பிரசாரம். 1939 ஜூலைமீ 8உ மதுரை ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் தீண்டாதார் ஆலயப்பிரவேசம் சூழ்ச்சியாகி நடந்ததும் அதற்கநுகூலமாக காங்கிரஸ் மந்திரிசபையார் சட்டம் செய்ததும் ஸநாதனிகளை நாடெங்கும் விழிக்கச்செய்துவிட்டது அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தலைவர் ராவ்சாகேப் ஸ்ரீஎன். நடேசய்யரவர்களின் சலியாதஉழைப்பும், ஸ்திரமானகளின் ஆதரவும் மெச்சத்தகுந்தது. என்றாலும் இன்னம் அதிகமான பிரசாரம் பத்திரிகைவாயிலாகவும் பிரசங்கவாயிலாகவும் இன்றியமையாதது மடாதிபதிகள் ஒருங்கு சேர்ந்து திட்டம்வகுத்து பிரசாரர்கள் நியமித்து நாடெங்கும் பிரசாரம் செய்யஇன்றே ஏற்பாடுசெய்ய நனிபெரிதும் வணக்கமாய் வேண்டுகிறேன். இப்பொழுது உள்ளநிலையில் அகில இந்திய வர்ணாச்ரமசுயராஜ்ய சங்கம் ஒன்றுதான் வேதநெறியையும் ஆசார அனுஷ்டானங்களையும் நோக்கங்களாகக்கொண்டு உழைத்து வருவது. அஃது ரிஜிஸ்தர் செய்யப்பட்ட சங்கமுமாகும். அதன் கீழ்நாமனைவரும் ஒருங்கு கூடி செயல்புரிவோமாக தர்மமேஜெயம்.

## ஸங்கீதகாரர்களுக்கு மாம்ஸ உணவு கூடாது.

### குரல் கெட்டு விடும்

ராஜபுதனத்தைச் சேர்ந்த டோல்பூரில் நடந்த ஸங்கீத வித்வான்களின் மஹாநாட்டில் ஸங்கீதக்காரர்கள் மாம்ஸ உணவு சாப்பிடக் கூடாதென்று ஓர் தீர்மானம் செய்யப் பட்டது.

மாம்ஸ உணவு சாப்பிடுவதால் சரீரம் கெட்டு குரல் விகாரமாகி விடுவதாகப் பல நிபுணர்கள் அனுபவத்தில் கண்டதை அங்கு விவரித்துக் கூறினர்கள். பக்ஷிகளில்கூட மாம்ஸம் சாப்பிடாதவைகளின் குரல் வெகு இனிமையாயிருப்பதாயும் மாம்ஸம் தின்னும் காக்கை, கழுகுபோன்றவைகளின் குரல் அசிங்கமாயிருப்பதாயும் அங்கு நிரூபணம் செய்யப்பட்டதாம்

## "காந்தியம் ஒழிய வேண்டும்''

### வங்காளமெங்கும் கோஷம்
### தேசீய வார சச்சரவுகள்

வங்காளக் காங்கிரஸ்காரர் இரண்டு பட்டுக்கிடக்கிறார்கள். ஸுபாஷ் கோஷ்டியார் காந்திய காங்கிரஸுக்கு எதிராக தேசிய வாரத்தில் பல விடங்களில் அமளி செய்தார்கள். கைராட்டினக்காக்ஷி நடத்த விடத்தில் போஸ் கக்ஷியார் பிரவேசித்து அதைத்தடுத்து விட்டார்கள். "காந்தீயம் ஒழிக'' என்ற கோஷமே எந்தக்கூட்டத்திலும் வெகுபலமாயிருந்தது காந்திகக்ஷியார் ஒரு கூட்டம் கூட அமைதியாக நடத்த முடியவில்லை. காந்தி கக்ஷி கூட்டங்கள் கலைக்கப்பட்டன. சிலவிடங்களில் அடிதடியும் நடந்தது. காந்திய காங்கிரஸ்வாதிகளும் புதியமாகாணக்கமிட்டியும் அங்கும் ஒரு வேலையும் நடத்த முடியாதபடி போஸ்கக்ஷியார் செய்து விட்டார்கள்.

## ஐக்யமாகாணகவர்னரின்தர்மசிந்தை

### தீண்டாதார்க்ஷேமத்திற்கு10 ஆயிரம் உதவி

அலஹாபாத்திலுள்ள தீண்டாதார் முன்னேற்ற ஸங்கத்தின் வேலைக்காக ஐக்யமாகாண கவர்னர் 10 ஆயிரம் ரூபாய் உதவி செய்திருக்கிறார். இந் ஸங்கம் ஒன்றுதான் இந்தியாவிற்குள் தீண்டாதாருக்கு உண்மையாக உழைத்து வருவதாகக் கூறப்படுகிறது.

## பிரிவினை எதிர்ப்புதினம்

### முஸ்லீம்களின் சிரத்தை

ஏப்ரல் 19உ யன்று ஜின்னா அபிப்பிராயத்தைக்கண்டித்து தேசமெங்கும் முஸ்லீம்கள் தீர்மானம் செய்ய வேண்டுமென்று ஏற்பாடாகியிருக்கிறது இந்தியாவைப் பிரிக்கும் விஷயமாக ஜின்னா சொல்லியதை எல்லாக்கக்ஷி முஸ்லீம்களும் அன்று ஆக்ஷேபிக்க அங்காங்கு பலத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன தென்னிந்தியாவிலும் இத்தகைய கூட்டங்கள் நடத்த சுயேச்சை முஸ்லீம்கள் ஏற்பாடு செய்து வருகின்றன.

## காந்தியை விரோதிப்பவர்கள் ராக்ஷஸர்களாம்!!

### ஸி. ஆர். பேச்சு

சேலத்தில் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியார் தேசிய வாரப்பிரசாரம் செய்து பேசுகையில், காந்தியை ஓர் அவதார புருஷரென்று வர்ணித்தார் ராம, கிருஷ்ணாதி அவதாரங்களை ராவணன், ஹிரண்யகசிபு போன்ற ராக்ஷஸர்கள் எதிர்த்தது போலவே இப்போதும் காந்தி அவதாரத்தைச் சில ராக்ஷஸர்கள் எதிர்த்து வருவதாயும்கூறினர்.

## வித்யார்த்திகள் தேவை.

கும்பகோணம் அத்வைத ஸபை ஆதரவில் நடைபெற்றுவரும் ஸ்ரீராஜூ சாஸ்திரிகள் சாஸ்திரோபதேச நிகேதனத்துக்கும், அய்யுவய்யர் - லெக்ஷ்மி அம்மாள் அத்வைத வேதாந்த பாடசாலைக்கும் வித்தியார்த்திகள் தேவை.

நிகேதனத்தில் வித்தியார்த்தியாக சேர விருப்பமுள்ளவர்கள் பிரஸ்தான த்ரயம் ஆனவர்களாகவும் அல்லது வேதாந்த சிரோமணிகளாகவும் உத்த்ரக்ரந்தங்களும் தீக்ஷதர்வாள் கிரந்தங்களும் வாசிக்க விருப்பமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

அய்யுவய்யர் அவர்கள் பாடசாலையில் சேர விருப்பமுள்ளவர்கள் வேதாந்த சிரோமணியல்லாமல் வேறு சிரோமணியாகவும் நல்ல வ்யுத்பத்தி உள்ளவர்களாயும் இருக்கவேண்டும். தர்க்க சிரோமணியாய் இருந்தால் சிலாக்கியம்.

ஷ்டி பாடசாலைகளில் சேரவிருப்பமுள்ளவர்கள் தங்கள் யோக்யதை வயது இவைகளைக் கண்டு 10-5-40 க்குள் ஸபை செக்ரடரி அவர்களுக்கு மனுச் செய்து கொள்ளவேண்டும். செக்ரடரி அவர்கள் அபிப்பிராயப்பட்டால் அவர்கள் நேரில் அவர்கள் சிலவில் ஆஜராகவேண்டும்.

எம். கே. வைத்தினாதய்யர்,
செக்ரடரி.

# ஸனாதனிகளும் ஹிந்து மஹாஸபையும்

## ஸ்ரீஸவர்காருடன் பேட்டி

### ஸ்ரீ Y. K. சேஷய்யரின் அறிக்கை

சிறந்த சனாதன தலைவரும், வக்கீலுமான ஸ்ரீ Y. K. சேஷய்யர், கீழ்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்:—

"ஹிந்து மஹா சபையின் மஹா நாடு சேலத்தில், கடந்த மார்ச்சு-மீ 22, 23, தேதிகளில் நடைபெற்றது.

முன்னேற்பாட்டின்படி நானும், இன்னும் சில நண்பர்களும் ஸ்ரீஸவர்க்காரை சந்தித்து பேசினோம். அவர் எங்களை மிகவும் ஆதரவுடன் வரவேற்றார். ஆனால், எங்களுடைய பேட்டியின் முடிவு திருப்திகரமாய் இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறேன். பேட்டி முடிந்தவுடன் என்ன இருந்தாலும், ஹிந்து மஹாசபையுடையவும், காங்கிரஸ்ஸுடையவும் ஸனாதன தர்மம் சம்பந்தப் பட்டவரை, மனப்போக்கில், சிறிதேனும் வித்தியாசமில்லை என்ற முடிவுக்குதான் வந்தோம்.

அதனால், அவர் தன்னுடைய கக்ஷி கொள்கையை நாம் ஒப்புக்கொள்ளவேண்டி, வாதம் செய்தார். அவர் சொல்வதை நாங்கள் பொறுமையுடன் கேட்டோம். பிறகு, பேட்டியில், சிறிதேனும நன்மையடையாமல் திரும்பினோம்.

நாங்கள் அவரை வேண்டிக்கொண்டதென்னவென்றால், தற்காலீகமாக அகில இந்திய ஹிந்து மஹாசபையானது தேசிய விஷயத்தில் தனிப்பட்ட பெரும்பான்மையான ஒரு ஜாதிக்கட்சியாக இருந்துகொண்டு, மதசம்மந்தமான பிரச்னைகளிலும் சமூக சீர்திருத்த விஷயத்திலும் சிறிதேனும் பங்கெடுத்துக்கொள்ளக்கூடாது என்பதே. அதனால் ஏற்படும் நன்மையை தவிர்த்து ஹிந்துக்கள் தற்போதய நிலையில், முஸ்லீம்கள், அரசாங்கம் அதோடு அநேகமாக காந்திஜியின் தலைமையின்கீழ் உள்ள காங்கிரஸ்ஸோடும் எதிர்க்கவேண்டியிருக்கும் அவசியத்தில், ஹிந்துக்களிடையே அத்தியாவசியமான ஒற்றுமையை மிகவும் விருத்திபண்ணும் என்று வாதாடினோம்.

தலைவர் எங்களது யோசனையை ஏற்க மறுத்துவிட்டார். அவர் 'தீண்டாதார் பிரச்னை' ஒரு தேசிய பிரச்னை என்றும் ஸனாதனிகள் ஹிந்து மஹாசபையின் கோட்பாட்டின்படி நடப்பதே உத்தமம் என்றும் பகிரங்கமாக தனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தினார். பிற்காலத்தில் ஹிந்துக்கள் அதிகாரத்துக்கு வந்தால் பாக்கி சீர்திருத்த விஷயங்களில் அதை கக்ஷி முறையில் ஆதரிக்காமல் ஷை பிரச்னை சங்கத்தின் மெம்பர்களின் 'யதேச்சை இஷ்டத்துக்கு விடுவதாக சொன்னார்.

தலைவர் பேட்டியும், மஹாநாட்டு விஜயமும், ஹிந்து மஹாசபையின் சேர்க்கையால் ஸனாதனிகளுக்கு ஒரு நன்மையும் இருக்காது என்று நான் ஏற்கனவேயே கொண்ட அபிப்பிராயத்தை ஊர்ஜிதம் செய்தது.

ஹிந்து மஹாசபைக்கு முஸ்லீம் லீக்கை எதிர்த்து போராடும்வரை தான் 'ஹிந்து' என்கிற வார்த்தை பொருந்துமே தவிர, மற்றபடி அது ஒரு 'அஹிந்து சங்கமே'.

ஹிந்து மஹாசபையின் தலைவர்களது ஒரே நோக்கமானது எப்படி முஸ்லீம்கள் வித்தியாசமில்லாமல் ஒரே இனத்தினர்களாக இருக்கிறார்கள் என்று நம்பப்படுகிறார்களோ அதே ரீதியில் ஹிந்துக்களையும் ஒன்றுபடுத்தவேண்டும் என்பதே. ஹிந்துக்கள் ஒருங்குசேர்வதற்கு ஜாதிப்பிரிவினைகளே முட்டுக்கட்டையாக இருக்கிறது என்று நினைக்கிறார்கள்.

முஸ்லீம்கள் தங்கள் மத நூலாகிய கொரானையும், கிறிஸ்தவர்கள் பைபிளையும் ஆராய்ந்து அறிவதற்கு எவ்வளவு ஊக்கமும் தீவ்ர உணர்ச்சியும் உள்ளவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவு உணர்ச்சி நமது தலைவர்களுக்கு இல்லாதது வருந்தத்தக்கது.

ஹிந்து மஹா சபையை இதிகாச புராணங்களில் நம்பிக்கையுள்ள ஸனாதனிகள் தங்களது விரோத ஸ்தாபனமாக கருதவேண்டும்.

நாம் நமது கக்ஷியை பல விதத்திலும் சீர்திருத்தி, பலப்படுத்தவேண்டும். கிராமந்தோறும் பிரசாரம் செய்யவேண்டும். பத்திரிகையானது ஒரு சிறந்த பலக் கருவியாகும். ஒவ்வொரு ஊரிலும் சங்கக் கிளைகள் இருக்கவேண்டும். ஏற்கனவேயே நாம் பின் தங்கி விட்டோம். இனியாவது, நாம் நமது நிலையை உணர்ந்து, முன் செல்ல முயற்சி செய்யவேண்டும்.

(தர்மராஜ்யா.)

# மூர்த்தி சிந்தனம்

## நாகபட்டணம் ஹிந்து மதாபிமான ஸங்கத்தில்

### போலகம் பிர்ம்மஸ்ரீ ஸுந்தரேச சாஸ்திரிகளால் செய்யப்பட்ட உபன்யாஸம்

மூர்த்தி சிந்தனமென்பதற்கு பகவதாகார த்யானமென்று பொருள். ஈச்வரனுக்கு மூர்த்தி என்னும் சரீரம் உண்மையில் இல்லாவிடினும் தனது இச்சையால் உபாஸகர்களின் நன்மையைக் குறித்து அழகான சரீரத்தை எடுத்துக்கொள்ளுகிறார் என்பது விஷ்ணு புராணம் முதலிய கிரந்தங்களில் சொல்லப்படுகிறது. நமது சரீரத்தில் போல் பகவத் சரீரத்தில் மாம்ஸம் ரத்தம் எலும்பு முதலியவை கிடையாது. நெய் கெட்டியாவது போல் ஸச்சிதானந்த ஸ்வரூபம் ஒரு சரீரமாக காணப்படுகிறது. கண்ணாடியில் ப்ரதிபிம்பம் போலும், ஆகாயத்தில் வில் விழுந்திருப்பது போலும் ஜ்யோதி ஸ்வரூபமாகவே பரமேச்வரனுடைய மூர்த்தியிருப்பதாக ஆகமங்களினால் தெரிய வருகிறது.

நமது முன்னோர்கள்எந்த காரியம் செய்வதானாலும் ஈச்வர மூர்த்தியை சிந்தனை செய்யாமல் ஆரம்பிப்பதில்லை. வெகுவாக நமது பாரத பூமியில் தேச பக்தியுள்ளவர்கள் அதிகமாக யிருக்கிறார்கள். தேச பக்தி வேண்டியது அவச்யமே. நமது தேசம் முன்னேற்றமடையவேண்டியது எல்லோருக்கும் பிரியமானதே. அவ்வித நோக்கம் ஸபலமாக வேண்டுமானால் தெய்வபக்தி வேண்டியது அவச்யமென்பதை உணராமல் முயற்சி செய்வதாலேயே தேச பக்தி பலனை அளிக்காமல் தடைபட்டிருக்கிறது. லோகமான்ய திலகர் போன்ற ஆஸ்திகர்கள் தைவபக்தியை முன்னிட்டு தேச நன்மையைக் கருதி வந்தபடியால் பாரத பூமியும் ஸங்கத்தின் வலிமையும் அதிகரித்து வந்தன. இப்பொழுதும் தைவபக்தியை ஒவ்வொருவனும் விசேஷமாக விருத்தி செய்துவந்தால் நமது இஷ்டம் எதுவும் விரைவில் கைகூடுமென்பதே திண்ணம். பரலோகத்திலும் ஜன்மாந்தரத்திலும் அடைய வேண்டிய நன்மைகளுக்கு பக்தியுடன் மூர்த்தி சிந்தனமே முக்யமான ஸாதனம். கர்மா-தபஸ் முதலிய சாதனங்களை அனுஷ்டிப்பவர்களுக்கும் ஈச்வர பக்தி அவச்யம். சிலர் ஞானம் மோக்ஷ ஸாதனமென்கிற ஸித்தாந்தத்தை ஆச்ரயித்து அதன் உண்மையை அறியாமல் மூர்த்தியை உபேக்ஷை செய்கிறார்கள். அவர்களுக்கு ஞானமே உண்டாகாது. மூர்த்தி சிந்தனம் இல்லாமல் சித்தம் கட்டுப்படாது. ஏகாக்ரதை மனதிற்கு ஏற்படாது. எங்கும் பரிபூர்ணமான பரமாத்மதத்வம் மனதில் ப்ரகாசிக்காது. இவை எல்லாம் மூர்த்தி சிந்தனத்தால் தான் ஸம்பாதிக்கத் தகுந்தது.

மூர்த்தி சிந்தனமென்பது நமது பாபங்களை அடியோடு விலக்குவதற்கு ஒரு முக்கிய பிராயச்சித்தமாகும். இது ஒரு மானஸதர்மம். ஆனாலும் மற்ற தர்மங்களைக் காட்டிலும் வித்தியாஸம் உண்டு. மற்றதர்மங்கள் பாபத்தை மாத்திரம் போக்கும். மூர்த்தி சிந்தனம் என்பது பாபம் புண்யம் இவ்விரண்டையும் போக்கும். நாம் மோக்ஷத்தை அடைவதானால் பாபம் புண்யம் இரண்டுமே ஒ[illegible] வேண்[illegible] பாபம் சரீரத்தைக் கொடுப்பது போல் புண்யமும் சரீரத்தைக் கொடுப்பதால் பாபம் இரும்பு விலங்கு என்றும் புண்யம் தங்கவிலங்கு என்றும் சொல்லப்படுகிறது. இதற்கு கோபிகைகள் உதாரணம். ஸ்ரீமத் பாகவதம் தசமஸ்கந்தத்தில் ராஸக்ரீடையில் சில கோப ஸ்திரீகள் வீட்டிற்குள்ளாகவே தடைபட்டு கிருஷ்ணமூர்த்தியை தியானம் செய்ய ஆரம்பித்தார்கள். ஸ்ரீகிருஷ்ணனை அடையாமல் விரஹதாபத்தை ஸகிக்க முடியாமல் வருந்துவதால் ஸகல பாபங்களும் விலகிவிட்டன. மறுபடியும் ஸ்ரீகிருஷ்ணனை தியானம் செய்யும் பொழுது கிருஷ்ணனுடைய ஆலிங்கனாதிகளை அனுபவித்து புண்யத்தையும் விலக்கிக்கொண்டார்கள். அதனால் அவர்களுடைய சரீரம் கீழே விழுந்து மோக்ஷம் ஏற்பட்டதென்று தெளிவாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் மூர்த்தி சிந்தனம் நம்முடைய ஸர்வச்ரேயஸ்ஸுக்கும் முக்கிய ஸாதனமென்று நிச்சயிக்கப்படுகிறது.

## சென்னை

### தேவஸேனா கல்யாணம்

சென்னை நுங்கம்பாக்கம் மாங்காடு ஸாமி அய்யர் தெருவில், உடையாளூர் ராமாயணம் அப்புஸ்வாமி சாஸ்திரிகளால் உபன்யாஸிக்கப்பட்டு வரும் ஸ்காந்த புராணத்தில் 5—4—40 வெள்ளிக்ழமை "தேவஸேனா கல்யாணம்" நடை பெற்றது.

(க. கி.)

திறமைவாய்ந்த எவ்வித நவீன பல் வயித்தியத்திற்கும், டாக்டர் கோஷியே.

பற்பொடிகளில் சிறந்த கிரூஸ்லீட் பற்பொடி ஒன்றே.

கிரூஸ்லீட் பல் ஆஸ்பத்ரி, ரெயில்வே ஸ்டேஷன் எதிரில், கும்பகோணம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥


ஆர்யதர்மம்
விக்ரம-ஹூ சித்திரை-மீ 6வ


## ஸ்ரீமான் ஆனேயின் புத்திமதி.

வைஸ்ராய் அவர்களுக்கும், ஸ்ரீயுத காந்திக்கும் நடந்த ஸமரஸப் பேச்சு முறிந்த பிறகு காங்கிரஸானது தீவ்ர வழியில் இறங்கி ராஜீயக் கிளர்ச்சி செய்ய யோஜனை செய்து வருவதை யாவரும் அறிவர். காந்தியில் [illegible] றும் அலலது சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்து விட நேருமென்று பாட்ணு தீர்மானமும், ராம்கார் காங்கிரஸும் தெளிவாகக் கூறுகிறது. காந்திஜியுள்பட தலைவர்களும் கூடிய சீக்கிரத்தில் அந்த இயக்கத்தை ஆரம்பித்துவிடப் போவதாக பிரசாரமும் பலமாக நடத்தி வருகிறார்கள். அதற்கேற்ற முன்னேற்பாடு சின்னங்கள் இருதரப்பிலும் தோன்ற அரம்பித்துவிட்டன. இந்த நெருக்கடியான ஸந்தர்ப்பத்தில், காங்கிரஸின் எதிரிகளின்றி அதன் க்ஷேமத்தையே விரும்பி நிற்கும் பலருடைய ஆலோசனையையும் காங்கிரஸ் வாதிகள் உதாஸீனம் செய்வது விவேகமாயிராது. சட்டமறுப்பு என்ற நெருப்புடன் விளையாடுவதற்கு இது ஸரியான ஸந்தர்ப்பமல்லவென்று காங்கிரஸ் வாதிகளே சொன்னால் அதை எப்படி அலக்ஷியம் செய்வது?

ஸ்ரீமான் ஆனே என்ற பிரபல ராஜீயத் தலைவரை அறியாதவர் இருக்கமாட்டார். தீவ்ர தேசாபிமானி, சிறந்த காங்கிரஸ் பக்தர். காந்திஜிக்கு அவரிடம் விசேஷ மதிப்புண்டு. இந்தியா சட்டசபையில் "தேசீய காங்கிரஸ் கக்ஷி" யின் தலைவர். இவர் சமீபத்தில் வைஸ்ராய் அவர்களைப் பேட்டிக் கண்டு ராஜீய நிலைமையைப்பற்றிப் பேசி இருக்கிறார். அவர் ஏதோ ராஜி முயற்சி செய்து வருவதாயும் வெளியிட்டிருக்கிறார்.

காங்கிரஸ் தற்சமயம் சட்டமறுப்பில் இறங்குவதை அவர் ஆக்ஷேபித்து ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். சட்ட மறுப்பை இப்போது ஆரம்பித்தால், ஏற்கனவே பரவி நிற்கும் வகுப்புவாதத் தீயானது வெகுபலப்பட்டு தேசத்தில் பெருத்த நாசத்தை உண்டுபண்ணிவிடுமென்று ஸ்ரீ ஆனே கூறுகிறார். இதன் உண்மையை காந்திஜீகூட மறுக்கமுடியாது. ஏற்கனவே சட்டமறுப்பு இயக்கம் நடந்த காலத்தில், இப்போதைப்போல் இவ்வளவு பயங்கரமான வேற்றுமைகள், முக்யமாக ஹிந்து முஸ்லீம் தகராறு, அப்போது இருந்ததில்லை. இப்போது சட்ட மறுப்பை ஆரம்பித்தால், பெரும்பாலான முஸ்லீம்கள் காங்கிரஸை எதிர்த்துப் போராட முன் வருவார்கள். காங்கிரஸிடம் அதிருப்தியுற்ற வேறு பல கக்ஷிகளும் காங்கிரஸை எதிர்க்கும். ஆகவே உள்நாட்டுப் போராட்டம் நிச்சயமாக ஏற்பட்டுவிடுமென்று ஸ்ரீ ஆனே நிச்சயிக்கிறார்.

காந்திஜியே தமது அறிக்கைகளில், ஏற்கனவே சட்ட மறுப்புக் காலங்களில் தமக்கு இருந்த செல்வாக்கும், பொதுஜன ஆதரவும் இப்போது இல்லையென்று தெளிவாகக் கூறி வருகிறார். ஆதலால் ஸ்ரீ ஆனேயின் வாதத்தை ஸ்ரீ காந்தியும் அறிந்திருக்கிறாரென்று தெரிகிறது. அப்படியானால் இப்போது பிளவு ஏற்பட்டுள்ள சமயத்தில் சட்ட மறுப்பு ஆரம்பித்தால் உண்டாகக் கூடிய அனர்த்தத்திற்கு இடம் கொடுப்பதா? மேலும் சட்ட மறுப்புக் காலத்தில் உள்நாட்டு வகுப்புக் கலகங்கள் ஏற்பட்டால், அவைகளைத் தடுக்க எவ்வித ஸாதனமும் நம்மிடம் இல்லையென்று ஸ்ரீ ஆனே சொல்வதும் கவனிக்கத்தக்க விஷயம். கலக ஸமயத்தில் இருதரப்பினரிடமும் செல்வாக்குடன் சென்று அதை அடக்கக்கூடிய ஆற்றல் பெற்ற இந்திய ஸ்வேச்சா ஸைன்யம் ஒன்றும் நம்மிடம் இல்லையே என்று ஸ்ரீ ஆனே எடுத்துக் காட்டுகிறார். இம்மாதிரி ஸ்ரீமான் ஆனே மட்டும் கூறவில்லை. இந்திய க்ஷேமத்திலும், காங்கிரஸின் கௌரவத்தை காப்பதிலும் சிரத்தை கொண்ட உண்மை தேசாபிமானிகளும் பலர் இவ்வாறே கூறுகிறார்கள்.

ஆகையால் காங்கிரஸ்ஸானது, எல்லோரையும் எதிரிகளென்று தள்ளிவிடாமல், விவேகிகளுடைய நயம் நிறைந்த ஆலோசனையை மதிக்கும்படியான நற்புத்தியை காங்ரஸ்காரர்களுக்கு பகவான் அளிப்பாராக.

## குறிப்பு

### காந்தி மட்டும் அப்படிச் சொல்லலாமோ?

இந்தியாவில் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படாத வரையில் ஸ்வராஜ்யம் கொடுக்க முடியாதென்று பிரிட்டிஷ் அதிகாரிகள் சொல்லி வருகிறார்கள். இந்தியா மந்திரி ஸெட்லண்டு பிரபு ஸமீபத்தில் இதை பலமாக வற்புறுத்தியுள்ளார். சில தேசீயப் பத்திரிகைகள் இதற்காக இந்தியா மந்திரியைக் கண்டித்து எழுதி வருகின்றன. ஹிந்து முஸ்லீம் வேற்றுமையை மிகைப்படுத்தித் தூண்டி விட்டு, ஸ்வராஜ்யம் வழங்க ஆட்டம் போடுவதற்காக இந்தியா மந்திரி அப்படிப் பேசினாரென்று அப்பத்திரிக்கைகள் பலமாகக் கண்டிக்கின்றன.

ஆனால் இதே குற்றத்தையே காந்திஜீயும் செய்து வருவதை மட்டும் அவை கவனிக்கவில்லை போலும்? ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை இல்லையாகில் ஸ்வராஜ்யமில்லை என்கிற பாட்டு காந்தியாலும் ஓயாமல் பாடப்பட்டே வருகிறதல்லவா? இதற்கென்ன பதில்? இந்தியா மந்திரியை மட்டும் கண்டிப்பானேன்? இந்தியா மந்திரியின் வார்த்தைகளையும், காந்திஜீயின் வார்த்தைகளையும் நேயர்கள் கவனிக்க வேண்டி கீழே குறிப்பிடுகிறோம். ஏப்ரல் 3 தேதியன்று இந்தியா மந்திரி செய்த ரேடியோ பிரஸங்கத்தில் சொல்லியதாவது:—

"ஹிந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் உண்மையான ஸமரஸம் ஏற்படாத வரையில் இந்திய பிரச்னைக்கு நிரந்தரமாக பரிஹாரம் காண முடியாதென உறுதியாக நான் நம்புகிறேன்."

மேற்கண்ட இந்தியா மந்திரி பிரஸங்கத்தில் ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமையை ஸ்வராஜ்யத்திற்கு ஒரு நிபந்தனையாக அவர் கூறியிருப்பது தெளிவாயிருக்கிறது.

ஆனால் காந்திஜீயும் மார்ச்சு மாதம் 18வ ராம்காரில் அகில இந்திய கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில் இதே அபிப்பிராயத்தை வெளியிட்டிருப்பதை கவனியுங்கள். காந்திஜீ கூறியதாவது:—

எப்போதும் ஸரி ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை இல்லையானால் ஸ்வராஜ்யமில்லையென்றே நான் கருதியிருக்கிறேன்.

இதைப் போலவே ஸமீபத்தில் காந்திஜீ ஜின்னாவின் பிரிவினை யோஜனையை எதிர்த்து ஹரிஜன் பத்திரிகையில் எழுதுகையில் சொல்லியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

காந்திஜீ அதில் கூறியிருப்பதாவது;—

என்னைப்பற்றிய வரையில், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படாத வரையில் இந்தியாவிற்கு ஸ்வராஜ்யம் இல்லையென்று 1919-ம் வருஷத்தில் நான் சொன்னதையே இப்போதும் உறுதியாகச் சொல்லுகிறேன்.

என்று அவர் எழுதியிருக்கிறார். மேலே காட்டியுள்ள, காந்தி அபிப்பிராயத்திலும் ஸரி, இந்தியா மந்திரி அபிப்பிராயத்திலும் ஸரி வித்யாஸமென்ன? இருவரும் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை ஒரு நிபந்தனையாகவே கூறியிருக்கிறார்கள். இருவருக்கும் உள்நோக்கத்தில் வித்யாஸம் கற்பிக்க முடியுமானாலும் நிபந்தனை ஒன்றாகவே இருக்கிறது.

இதுபோல் காந்திஜீ "தீண்டாமை விலகாத வரை ஸ்வராஜ்யமில்லை" என்றும் பாடிக்கொண்டு வருகிறார்.

ஸ்வராஜ்யத்திற்கு இம்மாதிரி காந்திஜீ நிபந்தனை விதிப்பதை இந்தியாவில் எந்த ராஜீயக் கக்ஷியும் ஏற்கவில்லை. காங்கிரஸிலேயே பெரும்பாலோர் ஒப்பவில்லை. ஹிந்து மஹா ஸபையும் காந்திஜியின் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை நிபந்தனையை பலமாகக் கண்டிக்கிறது. இந்தியா போன்ற பற்பல ஜாதிமதங்கள் அடங்கிய தேசத்தில் ஏதாவது ஒற்றுமைக் குறைவு இருந்துகொண்டு தானிருக்கும். சுயநலக்காரர்களின் விஷமத்தூண்டுதலாலும் வேற்றுமை இருந்து வருவது ஸஹஜம். இதற்காக ஸ்வராஜ்யத்திற்கு நிபந்தனை விதிப்பதை காந்திஜி செய்தாலும் சரி, இந்தியா மந்திரி செய்தாலும் அது ஆக்ஷேபிக்கத்தக்கதே.

## உபநயநச் செலவைக் குறைக்கவேணும்

### குடந்தை ஸ்ரீ மடத்தில் ஆலோசனைக் கூட்டம்.

சென்ற வாரம் சனிக்கிழமையன்று கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள் மடத்தில் ஆஸ்திக பிராம்மணர்களின் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்றது. பெரும்பாலும் லௌகிக பிரமுகர்களும் சிற்சில வைதிகர்களும் வந்திருந்தனர்.

தற்போது பிராம்மண ஸமூஹத்தில், தர்மாசரணசக்தி பொருளாதார நிலைமை ஆகிய முக்ய விஷயங்களை முன்னிட்டும், கூடிய வரையில் பிராம்மண்யத்தை ஸம்ரக்ஷித்துக் கொள்ளவும் உபநயந தர்மத்தையாவது

கூடியவரையில் வீண் ஆடம்பரச் செலவுகளை நிறுத்தி கேவலம் வைதிக விஷயத்தை முன்னிட்டு மட்டுமே நடத்தவேண்டும் என்றும், ஒரு உபநயனத்திற்கு ரூ. 25-க்கு மேல் செலவு செய்யவேண்டியதில்லையென்றும், பணக்காரர்களும் 25 ரூபாயில் உபநயனத்தை முடித்து பாக்கியுள்ள பணத்தைக் கொண்டு அநேக ஏழைகளுக்கு தர்ம உபநயனம் நடத்தி வைக்கலாமென்று ஸ்ரீ ஆசார்யர்வர்கள் விருப்பம் காட்டியபடி செய்ய முடியுமா என்ற விஷயமும் மேற்படிக் கூட்டத்தில் சர்ச்சை செய்யப்பட்டது. அனுபவ பூர்வமாகச் சில சிரமங்கள் ஏற்படக்கூடியதாயிருப்பதைத் தடுக்க முடியுமாவென்றும் பேசப்பட்டது. கடைசியாக ஒரு உபநயனத்திற்கு 25 ரூபாய்க்குள் செலவுகளை அடக்கிச் செய்யமுடியும் என்று எடுத்துக்காட்டினார்கள். பணமுள்ளவர்கள் 25 ரூபாயில் தன் பிள்ளைக்கு உபநயனம் செய்தபோதிலும் அவர்கள் ஏழைகளான பிள்ளைகளைப் பொருக்கிக் கணக்கு எடுத்து அவர்களுக்கும் தர்ம சிலவில் உபநயனத்தை செய்து வைக்க முடிவு செய்யப்பட்டது.

வெகுபேர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஸரியான காலத்தில் உபநயனம் செய்விக்க முடியாமல் அனேக குடும்பங்களில் 16 வயதுக்கு மேற்பட்ட பையன்களும் உபநயனமாகாமல் இருந்துவருவதாகத் தெரிகிறது. ஆதலால் இந்த விஷயத்தை சமூக க்ஷேம முறையில் கவனித்து எல்லா பிராம்மண குடும்பங்களும் உபநயன ஸம்ஸ்காரத்திலாவது கூடியவரை சாஸ்திர விதியை அனுசரிக்கும்படி செய்யவேண்டியது அவச்யமாயிருக்கிறது. மேலும் இந்த உபநயன தர்மத்தை ஒரு குறிப்பிட்ட பொது ஸ்தலத்தில் எல்லோரும் சேர்ந்து உபாகர்மா நடத்துவதுபோல் நடத்தினால் ஐகமத்யத்திற்கும், தர்ம விருத்திக்கும் ஸௌகர்யமாய் இருக்குமென்றும் யோஜிக்கப்பட்டது.

இரண்டொரு வித்வான்கள் அங்கு வந்திருந்ததால் அவர்கள் சில சிரமங்களை எடுத்துக் காட்டினார்கள். முக்ய தர்மப்படி செலவு செய்ய அதிகாரம் படைத்தவனைக் கூட 25 ரூபாயில் செய்யச் சொல்வது சாஸ்தீரியமாகுமா என்று ஒருவர் ஸந்தேகப்பட்டார். மற்றொருவர், விவாஹ மாகாத கன்னிகையின் இளைய ஸகோதரனுக்கு, அவளுடைய விவாஹத்திற்கு முன்பாக உபநயனம் செய்ய சாஸ்திரம் அனுமதிக்கிறதா என்று ஸந்தேகப்பட்டார். சாரதா சட்டம் உபநயன ஸம்ஸ்காரத்தைக்கூட பாதிக்கிறதாகத் தெரிந்தது. எப்படியும் 25 ரூபாய்க்குள் உபநயனத்தை முடித்துக் கொள்ள சாஸ்திரமும் ஸௌகர்யமும் இடம் கொடுக்குமென்று கடைசியாக தீர்மானிக்கப்பட்டது.

இவ்வூரிலுள்ள பிரபல லௌகிக கனவான் ஒருவர் சீக்கிரத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் நியமனப்படி மேற்கண்ட வழியில் உபநயனம் நடத்தப் போவதாகத் தெரிகிறது.

## மதுரையில் ஸ்ரீசங்கர ஜயந்தீ

### வித்வத்ஸபை நடைபெறும்.

சில கேள்விகள்

மதுரை அத்வைத ஸபை ஆதரவில் விக்ரம-ஹு சித்திரைமீ 26உ முதல் (மேமீ 8உ) ஸ்ரீசங்கரஜயந்தீ மஹோத்ஸவம் வழக்கம் போல் ஐந்து தினங்கள் நடைபெறும். ஒவ்வொரு தினமும் இரவில் பண்டிதர்களால் முக்யமான விஷயங்களைப்பற்றி பிரஸங்கம் நடக்கும். ஒவ்வொரு தினமும் பகல் 3 மணி முதல் வித்வத்ஸபை நடைபெறும்.

அடியிற்கண்ட கேள்விகளுக்கு நேரிலோ, எழுத்து மூலமாகவோ நல்ல பதில் கொடுப்பவர்களுக்கு, 50, 30, 25 என்று ஸம்பாவனை செய்யப்படும்.

கேள்விகள்

1. "ஜீவன், ஈச்வரபின்னன், அஸர்வவித்வாத் கடவத்" என்ற அநுமான விரோதத்திற்கு அத்வைத மதத்தில் பரிஹாரம் எப்படி?

2. ஹேது பலன்களுக்கு கார்ய காரண பாவம் அத்வைதிகளுக்கு இஷ்டமா? இல்லையா?

3. சிருஷ்டி முதலிய சுருதிகளுக்கு அத்வைத ஸித்தாந்தரீதியாக ஸ்வார்த்தே பிராமாண்யம் ஒப்பமுடியுமா? முடியாதா?

4. பிம்பங்களில் பாவிக்கப்பட்டுள்ள ஈச்வரூபத்திற்கு, நிமித்த வசத்தினால், ஸாந்நித்யலோபமோ, சலனமோ ஏற்படுமா? இல்லையா?

5. ஈச்வரன், ஸர்வகதன் நித்யசுத்தன் என்று போதிக்கும் சாஸ்திரம், ஸாபேக்ஷமா? நிரபேக்ஷமா? ஸாபேக்ஷ பக்ஷத்தில் எப்படி பிராமாண்யம்?

6. ஈச்வரனுக்கு, வியவஹாரதசையில் எந்தெந்த அம்சங்களில் ஜீவவைலக்ஷண்யம்?

7. பிரதிபிம்ப, அவச்சேத பக்ஷங்களுக்கு பேத மென்ன? எந்த பக்ஷம் பகவத் பாதாபிமதம்? அதற்கு ஹேது என்ன?

8. பிரத்யக்ஷத்திற்கும், ஆகமத்திற்கு விரோதம் நேர்ந்தால் அதில் எதற்கு பிராபல்யம்? அதற்கு உதாஹரணமும் கூறுக.

எழுத்து மூலம் பதில் எழுதுபவர்கள் கீழ்கண்ட விலாஸத்திற்கு தங்கள் பதிலை சித்திரை 15உக்குள் அனுப்பிவிடவேண்டும். அதற்கு மேல் வருபவை அங்கீகரிக்கப்படமாட்டா.

அக்ராஸனாதிபதி மதுரை அத்வைத ஸபா,
18 அக்பர் ஸாஹிப்தெரு, திருவல்லிக்கேணி.

## அகில இந்தியா வர்ணாச்ரம மஹாநாடு.

### நாகப்பூர்

அக்ராசனர் பிரசங்கம்.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் 12-வது மஹாநாடு இவ்வருஷம் கடந்த மார்ச்சு 30உ நாகப்பூரில் கூடியது. டில்லி சட்டசபை மெம்பர் ஸ்ரீ பஜோரியா தலைமை வகித்தார். அநேக சனாதன தலைவர்களும், பல மடத்து பிரதிநிதிகளும் மஹாநாட்டு பந்தலில் குழுமி இருந்தனர். தென்னாட்டிலிருந்து மதுரை ராவ்சாகிப் நடேசய்யரும், இன்னும் பல பிரதிநிதிகளும் விஜயம் செய்திருந்தனர்

கூட்ட ஆரம்பத்தில், காரியதரிசியால், பலரிடமிருந்து ஆசி செய்திகள் வாசிக்கப்பட்டன. பிறகு தலைவர் தனது பிரசங்கத்தை செய்தார். தலைவர் தற்போதைய தேசீய நிலையை ஆராய்ந்துவிட்டு, ஹிந்துக்களின் தற்கால க்ஷீண நிலையை விளக்கி, ஸனாதனிகள் ஒருங்கு சேர்ந்து தங்கள் கட்சியை பலவிதத்திலும் பலப்படுத்தவேண்டுமென்று சொன்னார். வகுப்புவாத தீர்மானம், அடியோடு அழிக்கப்படவேண்டும் என்றும், இந்தியாவின் சுயபாதுகாப்புக்கு வேண்டிய சௌகரியங்கள் இருந்தால் தான் இந்தியா டோமினியன் ஸ்டேட்டஸுக்கு தகுதி உள்ளதாகும் என்றும் சொன்னார். அவர் மேலும் உரைத்ததாவது :—

"இந்தியாவுக்கு தன் பாதுகாப்புக்கு வேண்டிய போதிய சாதனங்கள் ஏற்படாவிடில், இந்தியா பல சுதந்திர நாடுகளின் நடுவில் தனது ஸ்தானத்தை கௌரவமாக வகிக்கமுடியாது. அதனுடைய சுதந்திரமும், அன்னியரின் படையெழுச்சியால்

**The Kumbakonam Mutual Benefit Fund Limited, Kumbakonam.**

**NOTICE.**

The Annual General Meeting of the Share-Holders of the Fund will be held at 8 A. M., on Sunday the 5th May 1940 at the office premises No. 58, Big Street, Kumbakonam and the Register of Members of the Fund will be closed for admissions and transfers from 26th April 1940 to 11th May 1940.

By Order

Kumbakonam, 16—4—40. V. R. SATAKOPA IYENGAR, Secretary.

பாதுக்கப்படும். நாட்டில் அமைதி ஏற்படுவதற்கும், ஜனங்கள் எல்லோரும், தேசம் சம்பந்தபட்டவரை ஒரே கக்ஷியை சேர்ந்தவர்கள் என்ற உணர்ச்சி பெறவேண்டுமாயின் வகுப்புவாத தீர்மானம் முழுதும் எடுபட வேண்டும். வகுப்புவாத தீர்மானமானது, வீண் சச்சரவுகளை கிளப்பிவிட்டிருக்கிறது. ஆங்கில கவர்ன்மெண்டாருக்கு இது தங்களது உண்மையான நல்லெண்ணத்தை தெரிவிப்பதற்கு ஒரு நல்ல சமயமாகும். கவர்ன்மெண்டானது தேசத்தில் எல்லா ஜனங்களுடைய நம்பிக்கைக்கும், ஆதரவுக்கும், பாத்திரர்களாக ஆகவேண்டுமென்றால், அவர்கள் ஹிந்துக்களுக்கு கட்டாயராணுவ கல்வி அளிக்கவேண்டும்; வகுப்புவாதத் தீர்மானத்தையும் ரத்து செய்யவேண்டும்; ஜனநாயக ஆட்சிமுறையில் எனக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது அதிலும் தவறுகள் இருக்கத்தான் இருக்கின்றன. தற்காலிகமாக இதைவிட உயர்ந்ததிட்டம் வரும்வரை இப்போது அமுலிலிருச்கும் திட்டத்தை அனுசரிக்கும்படி வேண்டுகிறேன். ... கள் மேல் நாட்டு நாகரீகத்தால், ஸனாதன தர்மத்தின் உயர்ந்த தத்வங்களை தெரிந்து கொள்ளவில்லை. நமது மதத்தின் கொள்கைகளில் தெய்வீகம் பிரதிபலிப்பதை நம் நாட்டவர்கள் அறியாதது வருந்தத்தக்கது. காங்கிரஸ் ஆட்சியால் நிலைமை தலைகீழாக போய்விட்டது. நமது முறைகளிலுள்ள தெய்வீக உணர்ச்சி பின்னணியில் போய், நினைத்தபடி சட்டம் செய்யவும், நாம் அவைகளை ஏற்கும்படியான காலமும் வந்துவிட்டது. மேற்படி காரியங்கள், முஸ்லீம்களை திருப்திப்படுத்துவதற்காகவே தான். 1935 வருஷத்தின் இந்தியா சட்டத்தில் பல குறைகளிருப்பதால், கவர்னர்கள், ஸனாதனிகளின் விசேஷ உரிமைகளை பாதுகாக்க முடியவில்லை. மதப்பற்றுள்ளவர்களாகிற ஸனாதனிகள், பெருவரியாக இருந்தும், அவர்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. ஆனால் பல கக்ஷியினர்க்கு சிறுபான்மை என்ற முறையால் பாதுகாப்புக்கள் அளிக்கப்பட்டுவிடுகின்றன".

பின்னர் தலைவர் சென்னை Temple Entry Act-ம் சாரதா சட்டத்தையும் மற்றும் பல அசாஸ்திரீய சட்டங்களையும் கண்டித்துவிட்டு, மேற்படி எல்லா சட்டங்களும் ரத்து ஆகும் வரை ஸனாதனிகள் தளர்ச்சி அடையாமல், ஊக்கத்துடன் வேலை செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். மதுரை மீனாக்ஷி அம்மன் கோவிலில் தீண்டாதவர்கள் நுழைந்து, கோவிலின் உயர்ந்த ஸான்னித்தியத்தை கெடுப்பதற்கு காரண பூதர்களாயிருந்த சென்னை மந்திரி சபையாரை கடுமையாக கண்டித்து, மே. த. ராஜப் பிரதிநிதியை, ஜனங்கள் தங்கள் மத கோட்பாடின்படி கோவில் பூஜை செய்வதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கும்படி வேண்டிக்கொண்டார்.

## முப்பாற்சாரம்.

[தமிழ் வித்வான் ப. ரெ. திருமலை அய்யங்கார்]

### தோற்றுவாய்

"பூவிற்குத்தாமரையே; பொன்னுக்கு சாம்புநதம்;
ஆவிற்(கு) அருமுனிஆ; யானைக்(கு)-அமரர்உம்பல்;
தேவிற்றிருமால் எனச்சிறந்த(து) என் பவே
பாவிற்கு வள்ளுவர் வெண்பா''
(திருவள்ளுவமாலை—36)

மலர்களுக்குள்ளே தாமரை மலரும், பொன்களுக்குள்ளே சாம்புநதப் பொன்னும், பசுக்களுக்குள்ளே அருமையான வசிட்ட முனிவருக்கு உரிய காமதேனுவும் யானைகளுக்குள்ளே தேவர்கட்கு உரியதான ஐராவதமும், தேவர்களுக்குள்ளே திருமாலும் போல, நூல்களுக்குள்ளே திருவள்ளுவரது திருக்குறள் சிறந்தது என்று அறிவுடையோர் கூறுப.

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயினர் அருளிச் செய்த நூலின் திருநாமங்கள் பத்து. அவையாவன:— 1 திருக்குறள் 2 முப்பால் 3 உத்தரவேதம் 4 தெய்வநூல் 5 திருவள்ளுவர் 6 பொய்யாமொழி 7 வாயுறைவாழ்த்து 8 தமிழ்மறை 9 பொதுமறை 10 திருவள்ளுவப்பயன்.

இவற்றுள், முப்பால் என்பது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்றுபால்களையுடையநூல் எனப் பொருள்படும். பால் என்பது பகுப்பு. இதன் சாரத்தை எடுத்தியம்பத் துணிந்தனேம். இறைவன் இன்னருள் சுரப்பானாக.

இறையவர் எண்மர் அவர்களாகிறார்:— (1) இந்திரன் (2) அக்கினி (3) இயமன் 4 நிருதி 5 வருணன் 6 வாயு 7 குபேரன் 8 ஈசானன் இவர்கள் பதங்கள் எட்டு அவையாவன:—1 அமராவதி 2 தேஜோவதி (3) சம்யமினி (4) கிருஷ்ணங்கனை (5) சிரத்தாவதி (6) கந்தவதி (7) அளகாபுரி (8) யசோவதி இந்திரன் முதலிய தலைவர்களுடைய பதங்களையும், அந்தமிலின்பத்தழிவில் வீட்டையும், இதுவே கொள்ளத்தக்க சன்மார்க்கமென்று நல்லாசிரியர் வாயிலாக அறிந்து, அடைதற்குரிய மாந்தர்க்கு உறுதியைத் தருவதென உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள்கள் நான்கு. இவற்றைப் புருஷார்த்தம் என்பர். புருஷனால் விரும்பப்படுவது என்பது அதன் பொருள். அந் நாற்பொருளாவன:—(1) அறம் (2) பொருள் (3) இன்பம் (4) வீடு. முதல் மூன்றையும் திரிவர்க்கமெனவும் ஈற்றை அபவர்க்கம் எனவும் வடநூலார் கூறுவர். திரிவர்க்கத்தினின்று நீங்கல் அபவர்க்கம். அவற்றுள் வீடென்பது சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், அது துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லாமல் இலக்கண வகையாற் கூறப்படாமையின் நூல்களாற் சொல்லப்படுவன ஏனைய மூன்றுமேயாம். இலக்கணவகையாற் கூறாலவது பிருதிவிக்கிலக்கணம் கந்தமுடைமை என்பதுபோல்வது. அசாதாரண தர்மம் என்று சிறந்தகுறி. அதுவே இலக்கணம் எனக. திரிவர்க்கத்தில் முதலாவது அறம், அஃதாவது, மநு முதலிய நூல்களில் விதித்த செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். அஃது (1) ஒழுக்கம் (2) வழக்கு (3) தண்டம் என மூவகைப்படும். இவை முறையே (1) ஆசாரம் (2) வியவகாரம் (3) பிராயச்சித்தம் என்று கூறப்பெறும். அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அந்தந்த நிலைகளுக்கோதிய அறங்களில் வழுவாமல் நடத்தலாம். (வருணம்—சாதி; நிலை—ஆச்சிரமம்)

வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே எனது எனது என்று இருப்பவர் அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருளின்மேற் செல்வது. அது கடன்கோடல் முதலிய பதினெட்டு வகையினதாம். அப்பதங்கள் வருமாறு:— (1) கடன்கொடல் (2) ஒருவனிடத்துக் காக்கும்படி வைத்தபொருள் (3) உடையவனல்லான் விற்றல் (4) கூடியிலாபம் சம்பாதித்தல் (5) தானஞ் செய்த பொருளைக் கொடாமை (6) சம்பளங்கொடாமை (7) கட்டுப்பாட்டை மீறிநடத்தல் (8) ஒருபொருளை விற்றுவது வாங்கியாவது பின்பு சந்தேகித்தல் (9) மாட்டை உடையவனுக்கும் மேய்ப்பவனுக்கும் வரும் வழக்கு (10) எல்லை வழக்கு (11) அடித்தல் (12) திட்டல் (13) திருட்டு (14) வன்செய்கை (15) அயலான் மனைவியை அபகரித்தல் (16) மாதராடவர் தருமம் (17) தாயபாகம் (18) சூதாடல் இங்ஙனம் மநுதரும சாத்திரம் எட்டாவது அத்தியாயம் கூறுகின்றது.

தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் தவறினவரை அந்நெறி நிறுத்தற்பொருட்டு நீதிநூற்குத் தகவாராய்ந்து அக்குற்றத்திற்குத் தகுதியாகத் தண்டித்தலாம்.

இவற்றுள், வழக்கும் தண்டமும் உலக வழியில் நிறுத்துதலாகிய பயனைத் தருவனவாவதல்லாமல் ஒழுக்கம்போல் மக்கள் உயிருக்கு உறுதியைத் தருவதாகிய சிறப்புடையனவல்ல. மேலும் அவைதாம் நூலானேயன்றி அறிவு மிகுதியாலும் தேயவியற்கையானும் அறியப்படுவன ஆதலால் அவ்விரண்டையும் ஒழித்து தெய்வப்புலமை மாதாநுபங்கியால் சிறப்புடைய ஒழுக்கமே அறமென வெடுத்துக்கொள்ளப்பட்டது.

அவ்வறந்தான் நால்வகை நிலைகளை உடையதாய் வருணந்தோறும் வேறுபாடு உடைமையால் சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகளை யொழித்து எல்லார்க்கும் ஒத்திருத்தலால் பெரும்பான்மையாகிய பொது இயல்பு பற்றி (1) இல்லறம் (2)துறவறம் என இருவகை நிலையாற் கூறப்பட்டது.

அவற்றுள் இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகிற நெறிக்கண் நின்று அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடுஞ் செய்யப்படுவதாதலின் அதனை முதலிற் கூறத்தொடங்கி எடுத்துக்கொண்ட இலக்கியம் இனிது நிறைவெய்தற்பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார்.

### வர்ணஸ்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

மேல் மங்கலம்

பிரமாதி-ஞு பங்குனி-மீ 29ம்-உ வியாழக்கிழமை மாலை 4-மணிக்கு சபைத்தலைவர் ஸ்ரீ பிலாஞ்சேரி சுப்பிரமணிய அய்யரவர்கள் தலைமையில் சபை கூடிற்று.

கேரளசனாதனத்தலைவரும் ஆஸ்திக சிரேஷ்டருமான ஸ்ரீ கொல்லங்கோடு வாசுதேவராஜா அவர்களின் அகால பணத்தைக்கேட்டு வருந்துவதாகவும் அன்னவரின் ஆன்மா சாந்தி அடைய ஸர்வேச்வரனை பிரார்த்திப்பதாயும், அன்னவரது குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுவதாகவும் இக்கூட்டத்தில் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. (ந. கி.)

### ஸ்ரீ மஹோத்கட விநாயக அவதாரம்

சென்னை கிழ மாம்பலத்தில் புதிதாக நிர்மாணமாகும் ஸ்ரீ விநாயக ஆலயத்தில் சென்ற ஓராண்டாக பிர்ம்மஸ்ரீ ஸ்ரீ வத்ஸ. சோமதேவ சர்மா அவர்கள் செய்துவரும் ஸ்ரீ பார்க்கவ புராணத்தில் உபாஸனாகாண்டம் பூர்த்தியாகி சென்ற ஞாயிறு ஸ்ரீ நீலாகாண்டமாரம்பிக்கப்பட்டது. அதில் ஸ்ரீ கச்யபருக்கும் அதிதிக்கும் புத்ரனாகஸ்ரீவிநாயகர் அவதரித்த கட்டம்நேர்ந்ததால் உபன்யாஸகரவர்கள் ஸ்ரீ விநாயகருக்கு அபிஷேகமும் ஸஹஸ்ர நாமார்ச்சனையும் செய்வித்து ஸ்வாமிக்கு புது வஸ்தரமளித்து ஸபைக்கு விநியோக ஏற்பாடு செய்தார்.

கதை ரௌத்ர கேது என்பவருக்கு நராந்தகன் தேவாந்தகன் எனும் இருவர் தோன்றி பிரும்மாதி தேவர்களையும் பிடித்த போது பூமி தேவர் அனைவரும் விநாயகரை வேண்ட அவர் அதிதிக்கும் க்சயபருக்கும் புத்ரனாக தோன்றி அவதாரம் செய்தார். இரண்டு மணி உபன்யாஸம் நடந்தது. ஸபயர் உபன்யாஸகருக்கு தக்க ஸன்மானம் செய்தார்கள். முடிவில் தாம்பூல சந்தனம் வழங்கப்பட்டு லீவிற்காக 2 மாதம் கதை நிறுத்தப்பட்டது. ஜுன் மாதம் 20 தேதி கதை ஆரம்பமாகும். (க.கி.)

### கும்பகோணம்

உபன்யாஸம்

கும்பகோணம் மேட்டுத்தெரு ஸ்ரீசெங்கழனீர் விநயகர் ஆலயத்தில் விக்கிரம வருஷம் சித்திரைமீ 1-வ சனிக்கிழமை (13—4—40) மாலை 3½-மணிக்கு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு சங்கரபாதாளின் ஆக்ஞை பிரகாரம் மன்னார்குடி பிர்ம்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகளால் "மனித ஜென்மாவின்'' விசேஷத்தையும் அதை நாம் உபயோகித்துக் கொள்ள வேண்டிய முறையையும் பற்றி 3மணி நேரம் உபன்யாஸம் செய்த பிறகு மகா ஜனங்கள் ஸ்ரீமடத்திற்கு செய்யவேண்டிய கைங்கரிய விபரங்களையும் ஸ்ரீ ஆசார்யாள் ஆக்ஞைகளையும் மூன்றுதரம் படித்த பிறகு கூட்டம் கலையப்பட்டது. கூட்டத்திற்கு திரளாக மகாஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். (ஒ. கி.)


மிகச்சிக்கனம் பூர்ணகுணம்

'ஆத்ரேய'

## குடும்ப ஔஷதப் பெட்டி.

ஸாதாரணமாக ஏற்படும் எல்லா வியாதிகளுக்கும் ஒரு சிறந்த வைத்தியருடைய உதவியைச் செய்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், பிரயாணம் செய்வோருக்கும் அத்யாவசியமானது.

ஒரு பெட்டி விலை ரூ 5—0—0

'ஆத்ரேய'

ஆயுர் வேதிக் ஒர்க்ஸ்,

தென்னூர் ரோடு, திருச்சினப்பள்ளி.

# வெளியூர்ச் செய்திகள்.

## ஆத்தங்குடி வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கம்

### அநுதாபக்கூட்டம்

11-4-40 யன்று காலை 10-மணிக்கு இச்சபையின் விசேஷக்கூட்டம் சு. வீர. கதிரேசன் செட்டியார் தலைமையில் நடைபெற்றது.

அடியிற்கண்ட அனுதாபத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாட்சிமிக்க ஸநாதனதர்ம வீரரான கொல்லங்கோடு வாசு தேவராஜா அவர்கள், தம்முடைய வாழ்நாள்முழுதும், தர்ம ஸேவையே கடமையாகக் கொண்டு ஸேவை புரிந்தும், முக்கியமாக மலையாள ஆலயப்பிரவேசச் சட்டத்தை, தீவிரமாக எதிர்த்துப் போராடியும் நன்கொடைகள் உதவியும் பல ஸேவை புரிந்த ராஜா அவர்கள் பம்பாயில் அகாலமரணமடைந்ததை குறித்து இச்சபையார் ஆழ்ந்த அநுதாபத்தை ஸநாதன உலகிற்கும் மேற்படியாரின் குடும்பத்திற்கும் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

தென்னாட்டில் காலஞ்சென்ற பெரியோர்களான மஹாமஹோ பாத்தியாயர்களான சாஸ்திரரத்னங்களின் தேகவியோகம் குறித்து இச்சபை அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வூர் வேதபாடசாலை ஸ்தாபகரும் நம் ஸநாதன தர்மஸபையை நடத்திவரும்படி இடம்கொடுத்தவர்களுமாகிய திருவாளர்கு கும.சு. சுப்பிரமணியன் செட்டியாரவர்களின் புதல்வர் காசிச்செட்டியாரின் பத்தினியார் இளம்வயதில் அகாலமரணமடைந்ததைக் குறித்து இச்சபையார் வருந்துவதோடு அனுதாபத்தை மேற்படி செட்டியாரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

எம். திருவெங்கடமய்யங்கார்.
காரியதரிசி

## ஸ்ரீ ராமசந்திர பட்டாபிஷேகம்

### கோனேரிராஜபுரம்

பிரமாதி ஸு பங்குனி மீ 5உ முதல் இவ்வூர் மகாஜனங்கள் ஆதரவில் பகவத் கிருபையால் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யாளிடம் முத்திராதிகாரம் பெற்றிருக்கும் கே.வி. சுப்பிரமணியய்யர் கிருஹத்தில் ஆடுதுறைபெருமாள் கோவில் பிர்ம்மஸ்ரீ லெக்ஷ்மீகாந்த சர்மா அவர்களால் ஸ்ரீமத்ராமாயணபக்ஷாஹம் ஆரம்பிக்கப்பட்டு ஷை மீ 19உ திங்கட்கிழமை ஸ்ரீமத் ஸ்ரீராமசந்திர பட்டாபிஷேகம் வெகுவிமர்சையாய் நடைபெற்றது. இவ்வூர் மஹாஜனங்களால் வேஷ்டி திரவியங்கள் முதலியவைகள் ஏராளமாக சம்பாவனை செய்யப்பட்டன. இவ்வூர் உமா மகேச்வரஸ்வாமி கோவிலில் பள்ளியறைஸ்வாமிக்கு நூதன ஆலயம் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் சித்திரைமாசம் வெகுவிமர்சையாக நடைபெறும். பிரமாதி ஸு பங்குனி மீ 21உ ஏகாதசிதினம் ராத்திரி 8 மணிக்கு ஸ்ரீ ஜகத்சங்கராசார்யஸ்வாமிகள் ஏற்கனவே சென்ற மாசிமீ மகாசிவராத்திரிக்கு வந்திருந்து பூஜை செய்து உபன்யாஸம்செய்த பிரகாரம் எல்லோராலும் ஒப்புக்கொண்டு பிரதி ஏகாதசிக்கும் கதாசிரவணம் செய்வதாய் ஏற்பாடு செய்யப் பட்டபடி இவ்வூர் முத்ராதிகாரி கிருஹத்தில் கஜேந்திர மோக்ஷம் என்னும் கதை ஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள் அவர்களால் வெகுவிமர்சையாய் நடைபெற்றது. பிரமாதி ஸு பங்குனிமீ 26உ 28—4—40 திங்கட்கிழமை முதல் இவ்வூர் பெருமாள் கோவிலில் ஸ்ரீ ராமசந்திரஸ்வாமிக்கு ஸ்ரீ ராமநவமி உத்ஸவம் பிரதிவருஷம் வழக்கம் போல் உள்ளூர் பாகவதகோஷ்டியால் வெகு விமர்சையாக நடைபெற்றது சித்திரைமீ 4உ ஸ்ரீராமநவமிதினம் ஸ்வாமிபுறப்பாடு மேளதாளவைபவங்களுடன் சிறப்பாய் நடைபெற்றது. (ஓ. கி.)

## வழுத்தூரில் ஸம்ஸ்கிருத பிரஸங்கம்

ஐயம்பேட்டைக்கு அடுத்தாற் போல் உள்ள வழுத்தூர் கிராமத்தில் உபன்னியாஸம் ஒன்று நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீமான் சுந்தரராஜபட்டாசாரியார் தலைமை வஹித்தார். சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலை சம்ஸ்கிருதசபை தலைவர் ஸ்ரீமான் A V. சௌரிராஜன் அவர்கள் காளிதாஸர் எழுதிய சாகுந்தலத்தின் மேன்மையைபற்றியும். பாரததேசத்தில் உண்டானநாம் அனைவரும் பாரதீயகலையை கற்க வேண்டுமென்றும் கேட்போர்மனதுகரையும் படி சம்ஸ்கிருத பாஷையிலேயே சுமார் 1-மணிநேரம் உபன்னியஸித்தார். பிறகு வந்திருந்தோர் அனைவரும் சௌரிராஜன் அவர்களை ஆசீர்வதித்தனர்.

திருப்பதியில் சம்ஸ்கிருதபாஷையை பேசும் பாஷயாக ஆக்கவேண்டுமென்று தீர்மானித்ததற்கு. நன்றிகூறப்பட்டது. (ஓ. கி.)

## ஆத்தன்குடி

### ஆவணி ஸ்ரீ சங்கராச்சார்யஸ்வாமிகள் விஜயம்

விக்ரம-ஸு சித்திரை-மீ 2உ ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு ஸ்ரீ ஆவணி சிருங்கேரி ஜகத்குரு சங்கரார்யஸ்வாமிகள் விஜயம் செய்தார்கள். மஹாஜனங்கள் பூர்ண கும்பத்துடன் எதிர்கொண்டழைக்க வேதகோஷம் ஒலிக்க, மேளதாளம் முழங்கபக்தகோடிகள் புடைசூழ, ஊர்வலம் தர்மசீலர் ராம கும. சு. வேதபாடசாலையில் நின்றது. ஸ்வாமிகளவர்கள் பாடசாலையில் பூஜைமுதலான காரியங்களை பூரணமாக நடத்தி வருகின்றனர். ஆஸ்திகஸ்திரீபுமான்கள் பக்தி சிரத்தையுடன் ஸ்வாமியை தரிசித்து ஸ்ரீசந்திர மௌளீஸ்வரர் அநுக்ரஹத்திற்கு பாத்ரமாகின்றனர். (ஓ.கி.)

## ஸ்காந்த புராண பிரவசனம்

சுமார் இரண்டு மாதகாலமாய் பரித்தியூர் பிர்மஸ்ரீ, P. K. வைத்தினாத தீக்ஷிதரைக் கொண்டு நடத்திவரும் காசி கண்ட உபன்யாஸத்தாலும் சில மாதங்களுக்கு முன் அரிவிக்திமங்கலம் கிராமத்தில் நடந்த பாகவத உபன்யாஸத்தாலும் வைதீகமென்றால் இன்னது என்று அறியாத நாங்கள் ஸ்நானம் ஸந்தியாவந்தனம் ஔபாஸனம் முதலிய நித்திய கர்மாவில் ஈடுபட்டிருக்கிறோம் ஆகையால் ஷை உபன்யாஸகருடைய அழகையாரும் ஆனந்திக்கத்தக்கது. (ந.கி.)

## சேங்காலிபுரம்

ஸ்ரீமான் S. U. பஞ்சாபகேசய்யர் அவர்கள் கிருஹத்தில் ஒருமாதகாலமாய் ஸ்ரீராமாயணம் பிரும்மஸ்ரீ அப்பாஸ்வாமி சாஸ்திரியார் அவர்களால் காலையில் மூலபாராயணமும் இரவு 8-மணி முதல் கதாப்பிரவசனமும் நடந்தப்பட்டு வந்த ஸ்ரீ வால்மீகி ராமாயணம் பூர்த்தியாகி சென்ற மாதம் 18-உ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ ஸீதாராம பட்டாபிஷேக மஹோத்ஸவம் வெகுவிமர்சையாய் நடைபெற்றது. ஆஸ்திக மஹாஜனங்கள் அனைவரும் வந்து பேரானந்தமடைத்தார்கள். பிரஸங்கபானு பிரும்மஸ்ரீ வைத்தினாத சாஸ்திரிகள் அவர்களால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டது.

ராமமூர்த்தி சேங்காலிபுரம்

## குடந்தையில் முத்ராதிகாரி பிரசாரம்.

ஸ்ரீ ஜகத்குரு சங்கர பகவத்பாதாளின் ஆக்ஞைப் பிரசாரம் சோலையப்பமுதலிதெரு ஸ்ரீவிசாலாக்ஷிஅம்மன் ஸன்னதியில் சென்ற 3—4—40-உ ஏகாதசி யன்று சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ நாராயண தீக்ஷிதர் அவர்களால் வாமனாவதாரம் என்னும் சரித்திரம் உபன்யஸிக்கப்பட்டது. ஆஸ்திக சிரோன்மணிகள் ஏராளமாக விஜயம் செய்திருந்தார்கள். வழக்கம் போல் கோகிரதம் சேகரிக்கப்பட்டு ஸ்ரீ மடத்திலும் சேர்பிக்கப்பட்டது.

ஸ்ரீ பரமாசார்யாளின் ஆக்ஞைப்பிரகாரம் வருஷப்பிறப்பு தினத்தன்று (13-4-40-உ) மாலை 6-மணிமுதல் 7½-மணிவரையிலும் ஷை அக்ரஹாரம் ஸ்ரீ விசாலாக்ஷியம்பாள் ஸன்னதியில் ரிடயர்டு ஸப்மேஜிஸ்ட்ரேட்டு ஸ்ரீ அய்யாத்துரை அய்யர் அவர்கள் அக்ராஸனத்தின் கீழ் ஆச்சார்யாளின் ஆக்ஞையை அதில் குறிப்பிட்டவாறு மஹாஜனங்களுக்கு வாசித்து பிரசுரம் செய்யப்பட்டது.

வருகிற 18—4—40-உ ஏகாதசி யன்று ஷை ஸன்னதியில் பெங்களூர் பிரும்மஸ்ரீ கதாரத்தனம் கிருஷ்ணபாகவதர் அவர்களால் இரவு 8-மணிக்கு ருக்மாங்கதன் என்னும் ஹரிகதா காலக்ஷேபம் நடைபெறும்.

சா, சுப்பிரமணிய அய்யர்
ஸ்ரீமடம் முத்ராதிகாரி

## சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

### கொல்லங்கோடு ராஜாவிற்கு அனுதாபம்

ஷை ஸங்கத்தின் கார்யதரிசி அவர்கள் கொல்லங்கோடு ராஜா அவர்கள் காலஞ்சென்றதைக் குறித்து ஸங்கத்தின் சார்பாக ஓர் அநுதாபச் செய்தியை வெளியிட்டிருக்கிறார்.

அதில் ஸர் ராஜா ரங்கய்யர் மசோதா எதிர்ப்பு விஷயத்திலும், மற்றவைகளிலும் வெகு தீவ்ரமாக நமக்கு உதவி புரிந்து வந்த விஷயங்களை குறிப்பிட்டுள்ளார்.

நன்னிலம் தாலுக்கா நல்லமாங்குடி ராமாயண விலாஸில், உடையாளூர் ராமாயணம்
அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள்
**ஸ்ரீமத் ராமாயணம்**
ஏப்பிரல் 21 தேதி முதல் பிரதி தினம் இரவு 7-30 மணிக்கு உபன்யசிப்பார்கள். அனைவரும் வந்து கதாச்ரவணம் செய்யும்படி கேட்டு கொள்ளுகிறேன்
G. பிச்சுமணி அய்யர்.

## ராமராஜ்யத்தைப் போற்றுவதேன்?

(தசரதன் சரிதம்.)

குலத்தினளவே ஆகுமாம் குணம். என்றபடி தசரதன் தன் தந்தை அஜனைப்போலவே குடிகள் நன்மைக்காகவே வாழ்ந்தான். பிதா கீறிய கோட்டைமீறாமல் அதிலும் சிறப்பாக பொதுஜநத்தொண்டு செய்யக்கருதினான்.

வான் சிறப்பை வள்ளுவர் போற்றியது போல் தசரதன் தேசநலத்திற்கு மழையே முக்யகாரணமெனக்கருதி அங்ஙனம் மாதம் மும்மாரி மழைபொழிகிறதா? என அதில் ஊக்கஞ் செலுத்தினான். மழையால் செடி கொடிகள், அவைகளால் ஜீவராசிகள். அவர்களால் வேள்விமூலம் தேவர்கள் உணவு. தேவர்களால் மழை! என இது ஓர் சக்ரம்!! இதுசுழண்டு கொண்டே இருந்தால் தான் உலகவாழ்கை நடைபெறும் எனகீதாசார்யன் கூறுகிறானல்லவா.

உலகிற்குப்பலவகையான தொண்டுகள் தேவை! சிலருக்கு சிலது மனதிற்கிசைந்ததாகும். சிலர் கல்வியில், சிலர் பொருளாதாரத்தில், சிலர் தொழில் சிலர் சுகாதாரத்தில் சிலர் தாழ்ந்தோர் முன்னேற்றத்தில்! சிலர் உழவில்! சிலர் மற்றும் சிலவகையில் ஊக்கம் கொண்டு உலகிற்குழைப்பர்.

தசரதனோ மாதம்மும்மாரிமழைபொழிவதே எல்லாத்துறைக்கும் ஏற்ற ஸாதநமென எண்ணினான்! ஓர்மாதம் ஒருமழை இல்லாவிடினும் சிந்தைநொந்து அறத்தைக் கைகொண்டு மழை பொழியச் செய்வான்.

அத்துடன் நிற்காது தன் குடிகளில் யார் யாருக்கு என்னஎன்ன குறை? என்று அற்றன்றும் அதைத்தேடித்திரிவான்!! ஆனால் அவன் அகற்றத்தக்ககுறை ஒன்றுமில்லாததைக்கண்டு வருந்துவான். தன் குடிகளுக்குறை வேண்டுமென்பது அவன் கருத்தல்ல!! தனக்குத் தொண்டு செய்ய அவகாசமில்லையே என்ற மனக்குறை தான்.

ஜனங்கள் கூறிய ஓர்குறை அவன் செவியில் வீழ்ந்தது! அது யாது! இத்தகைய உத்தம மன்னருக்கு ஓர் ஆண் குழந்தை இல்லையே என்பது தான். இறைவனருளால் தக்ககாலத்தில் தானே தோன்றுமது. பணிசெய்துக்கிடப்பதே என்கடன் என்று வேந்தனதைப் பொருட்படுத்தவில்லை.

முற்காலமன்னர் வீரரில்! வீரர்! விக்ஞானியில் விக்ஞானி! மெய்க்ஞானியில் மெய்ஞானி! கவியில்கவி!! ஜோதிடரில் ஜோதிடராயிருப்பரல்லவா? தசரதர் மழையில் கருத்து கொண்டவராதலின் க்ருஹங்களது சர்யையை உற்று நோக்கிய வண்ணமிருப்பர். ஏதேனும் க்ருஹசாரங்களால் மழைதடைபடின் உடனே அதற்கேற்ற சாந்தி செய்து அதை அகற்றுவார்!

ஓர்ஸமயம் சனைச்சரன் ரோஹிணியின் இருப்பிடத்தைநாடிக்கிளம்பினார்! அவர் அவ்விடத்தைச் சேர்ந்து விட்டால் பாரினில் பனிரண்டாண்டு மழைபொழியாதெனவன் அதைச்சேரவிடாமல் செய்யக் கருதினான். ஸாம தாந பேதமென்ற மூன்றிலும் பயன்படாமல் போகவே தண்டத்தைக்கை கொண்டான்!!

வஸிஷ்டர் மந்தரசக்தியால் தசரதன் தன் ரதம் மண்ணிலும் விண்ணிலும் மலையிலும் கடலிலும் செல்லுமாம்!! மன்னன் ரதத்திலமர்ந்து க்ரஹமண்டலஞ் சென்றான். அங்கு சனைச்சரனைக்காணாது ரோஹிணியிருப்பிடத்திற்குக் கிளம்பினான். வழி நடுவே அவனைக்கண்டு கம்பீரமாக ” நில் நில். உன்னை வெல்லவந்தேன். “ எனவேந்தன் கூறினான். சினங்கொண்டு சனைச்சரன் ராஜனை உற்று நோக்கினான் அதற்கு அஞ்சாத பூபதி மறுபடியும் ‘நில் நில்” எனக் கூற, அவருக்குப் பேராச்சரியம் உண்டாயிற்று. “அப்பா நீயார்? நீ ஓர் உத்தம தபஸியாயிருத்தல் வேண்டும்? இல்லையேல் எனது பார்வையினாலே இறந்திருப்பாய்! என் பார்வையால் எனது தந்தை கால் அழுகிக்கறுத்திப்போயிற்று! எனதன்னை குழந்தாய்! நீ இனி எவரையுங் கண்ணால் கிமிர்ந்துப்பாராதே என்றான்! அதில்தப்பிப்பிழைத்த உத்தமன் நீயார்? என்றார் சனைச்சரன்.

தசரதன் யான் குடிகளுக்குத் தொண்டு செய்வவைத்தவிற வேறொரு தபஸ்ஸையும் மறியேன்! நீர் ரோஹிணிபுடன் சேர்ந்து உலகிற்குப் பஞ்சத்தை உண்டுபண்ணக்கருதுவதால் உம்மை சிக்ஷிப்பேன்! என்றார். சனைச்சரன் வேந்தே! நீயும் உமது புத்ரனும் அரசாக்ஷி நடத்தும் வரை யான் ரோஹிணியுடன் சேருவதில்லை உனது பறந்த நோக்கத்திற்கு மழ்கிந்தேன்! உனக்கென்னவரம் வேண்டும்? சொல். அரசன் உமது வாரத்தில் எண்ணை தேய்துக் கொள்பவருக்கு அடுத்த வாரம் வரையிலும் உம்மால் உண்டாகும். பீடை இல்லாதிருத்தல் வேண்டும். உமதுவாரத்தில் எள்ளு, எண்ணை இரும்பு இவைகளைத் தானம்செய்வோரை நீ ஓராண்டு பீடிக்கலாகாதென்றார்!

சனி அங்ஙனம் வரமளித்துச்செல்ல, மன்னனது கீர்த்தி மாநிலமெலாம் பரவிற்று! விண்ணுலகத்தவரும் வியந்தனர். சக்ரன் அரசனை அழைத்து “ உம்து ஒப்பற்ற பரோபகாரத்தால் நல்லாக்ஷியால் ஆயிரம் அச்வமேதங்களைவிட அதிக ஸந்தோஷமுண்டாயிற்று. வேண்டிய வரத்தைக் கேள்” என்றார்,

ம:—தேவேந்த்ர! என்னோடு போன்னோடு போலிருக்க வேண்டும். அதற்கு உமது உறவும் ஒத்துழைப்புமே வேண்டற்பாலது! நான்வேண்டும் வரமிதுவே!!

இ:—தர்ம ராஜ்யம் நடத்தும் நரோத்தம!! உனக்கென ஒருவரமென்னிடம் கேளாது குடிகள்நலமே பெரிதெனக்கருதினாய்!! நல்லது அன்றன்றும் நமது ஸபைக்கு வந்தது நம்மருகில் ஸிம்மாஸநத்திலமர்வாய்!

அங்ஙனமே தசரதன் இந்திரனாக்ஷி போல் தம் நாட்டை ஆள அங்குசென்று வருவான். அவனமர்ந்தஆஸநத்தை ஜலத்தினால் அன்றன்றும் அலம்பும்படி சக்ரன் கிங்கரருக்குக் கூற அங்ஙனமே நடைபெற்றது. ஒருநாள் தேவரிஷி நாரதர் இதைக்கண்டு இது ஓர் தேவரஹஸ்யம் இதனால் ஓர் அரியஒப்பற்ற லோகோபகாரம் செய்க்கருதினார். உடனே தசரதனிடம் சென்று இதை ரஹஸ்யமாக கவனிக்கும்படி கூறினார்! அங்ஙனமே அவர் அதைக் கண்டபின் அடங்காக்கோபங்கொண்டார்!!

அ.சக்ர! இஃதோ நன்பனது லக்ஷணம் யான் பாபியர்யின் எனது பாபத்தைக் கூறித்திறுத்துவதன்றோ உமது கடமை? யான் செய்தபாபந்தானென்ன?

எனதுகுடிகளை எல்லோரையும் ஸமமாக நடத்தவில்லையா? தண்டிக்கத் தக்க வரை உறவினரென்றோ வேறு காரணம் பற்றியோ தண்டிக்காது விட்டேனா? தகாதவனைத் தண்டித்தேனா? எவரிடமாவது அதிக வரி வாங்கினேனா? எனது நாட்டில் மும்மாரி பொழிய வில்லையா? உணவின்றி எவரேனும் என்னாட்டில் இறந்தனரா?

எளியவரை வலியவர் இம்ஸித்தாரா? பெற்றோரிருக்க மைந்தன் இறந்தானா? கணவனையிழந்த காதலிகள் உண்டா? உறவினரை உணவளிக்காது விட்டவருண்டா? கல்வியில்லாத மனிதரைக்கண்டனையா? தேவசிந்தையில்லாமல் கண்டதே காக்ஷி எனக் கூறுபரைக் கண்டனையா? தம் தம் தர்மத்தை விட்டவர் எவரேனுமுண்டா? கற்பிழந்தவரைக் காண முடியுமா? பிணியால் துன்புருவோர் உண்டா? எம்மை! களவு! காமம்! கொலை கலஹம் கோள் சொல்லல்! பொறாமை முதலிய தீய குணங்களில் ஒன்றையேனும் காணமுடியுமா? ஒவ்வோர் குடியும் ஆநந்தமாக குறைவின்றி சாந்தியுடன் வாழும்படி பரிபாலனம் செய்யும் என்னிடம் என்ன பாபமுளது என்றார்.

சக்ரனிதைக் கேட்டு புன்னகை கொண்டு மன்ன!! இவ்வளவு உத்தமகுணம் வாய்ந்த உமக்கு ஓர்புத்ரபாக்யமில்லாததே ஆஸநத்தை அலம்பக்காரணமென்றார்! தசரதன்; ஆனால் உத்தமபுத்ரனைப் பெற்று பின்னர் உமது ஸபைக்கு வருவேன்என்று கூறி! அயோத்யைக்கு வந்து மந்திரிகளிடம் இதைக்கூற. அவர்கள் ஹாடகேசனை ஆராதித்து அங்கு ஹரியைப்ரதிஷ்டைசெய்! என்று கூறினர். அரசன் அங்ஙனமே பகவானை உபாஸித்து அவரம்சமான ஸ்ரீ ராமலக்ஷ்மணபரத சத்ருக்னர்களையும் சாந்தைஎனும் கன்யகையும் பெற்றார். தன்னைப்போல் புத்ரபாக்யமில்லாது வருந்தும் ரோமபாத ராஜனுக்கு சாந்தையை ஸ்வீகாரமாக அளித்தார். பரோபகாரார்த்தமிதம்சரீரம்.

ஸ்ரீ.பாலா

## இந்தியாவைப் பிரிக்கும் யோஜனை!

### ஹிந்து ஸபையின் தீவ்ரஎதிர்ப்பு

இந்தியாவை பிரிக்க ஜனாப்ஜின்னா சொன்ன யோஜனையை எதிர்த்து தேசத்தில் எல்லாக் கக்ஷியாரும் அபிப்பிராயம் தெரிவித்து வருகிறார்கள். மஹம்மதியர்களிலேயே பெரும் பாலோர் இதை எதிர்க்கின்றனர் சீக்கியர், கிருஸ்தவர் ஆர்ய ஸமாஜி முதலியவர்களும் எதிர்க்க முடிவு செய்து உள்ளார்கள்.

ஹிந்து மஹாஸபையார் இதை பலமாக எதிர்க்க “ஹிந்து லீக்” என்ற ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளார்கள்.

ஜின்னா யோஜனையைஎதிர்க்க வேண்டி டில்லியில் அகில இந்தியா சுயேச்சை முஸ்லீம்களின் மஹாநாடு நடத்த ஏற்பாடாகி வருகிறதாம்.

## காந்தி வீட்டில் நுழைந்தவர் கைதி

காந்திஜியின் வாசஸ்தலமான சிவகிராமத்தில் அவருடைய ஆச்ரமத்தில் பலாத்காரமாக நுழைந்ததற்காக, ஒருவர் வார்தா போலீசாரால் கைது செய்யப்பட்டார்

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.